| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

ந.க.எண்.127311 / எச்1 /2020 நாள். 09.10.2020

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் 2020 – தேர்வர்களுக்கு மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்கள் விநியோகம் செய்தல் தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.379, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM.II) துறை, நாள்.22.07.2020.

2. இவ்வலுவலக செய்திக் குறிப்பு, நாள். 09.10.2020.

-----

மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு பள்ளி மாணவர்கள் / தனித் தேர்வர்களுக்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்கள் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு **12.10.2020** அன்று இத்துறையை சார்ந்த அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் வழங்கப்பட உள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களிடம் **12.10.2020** அன்று உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து மதிப்பெண் சான்றிதழ் கட்டுகளை பெற்றுக் கொண்டு, **13.10.2020** அன்று பள்ளித் தலைமையாசிரியர்களிடம் மதிப்பெண் சான்றிதழ் உறைகளை வழங்க அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பள்ளித் தலைமையாசிரியர்கள் மதிப்பெண் சான்றிதழ் உறைகளை பெற்றவுடன் தம் பள்ளிக்கு உண்டான அனைத்து மதிப்பெண் சான்றிதழ்களும் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மார்ச் 2020, மேல்நிலை முதலாம் ஆண்டு (+1 Arrear) / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி வாயிலாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையம் வாயிலாகவும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களை (Original Mark Certificates) / மதிப்பெண் பட்டியலினை (Statement Of Mark) 14.10.2020 அன்று பெற்றுக் கொள்ளலாம் என பார்வை 2–ல் காணும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் / தேர்வு மையங்களில் மாணவர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ்களை / பட்டியல்களை வழங்கும்பொழுது, பார்வை 1–ல் காணும் அரசாணையில் உள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றிட வேண்டும் என்ற விவரத்தினை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>பள்ளிகளில் / தேர்வு மையங்களில் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல் வழங்கிடும்போது பின்பற்ற வேண்டிய அறிவுரைகள்</u>

i. மதிப்பெண் சான்றிதழ்களை பெற நீண்ட வரிசையில் மாணவர்கள் / பெற்றோர்கள் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு, மாணவர்கள் பள்ளிக்கு வருகை தர வேண்டிய நேரம் குறித்து முன்னரே மாணவர்களுக்கு தெரிவித்திட வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு 20 மாணவர்களுக்கு மிகாமல் பள்ளிக்கு வருகை புரியுமாறு திட்டமிடுதல் வேண்டும்.

ii. மாணவர்கள் வரிசையில் நிற்கும்பொழுது சமூக இடைவெளியினை கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக தரையில் போதிய இடைவெளி விட்டு குறியீடுகள் உருவாக்கிட வேண்டும்.

iii. மதிப்பெண் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள பள்ளிக்கு வருகை தரும் மாணவர்கள் / பெற்றோர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

iv. மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்கள் வழங்கும் நாளன்று பள்ளி நுழைவு வாயிலில் கூட்டம் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு சமூக இடைவெளிக்கான விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடித்தல் வேண்டும்.

v. மதிப்பெண் சான்றிதழ்களை விநியோகம் செய்யும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் / ஆசிரியர்கள் கட்டாயம் கையுறை அணிந்திருத்தல் வேண்டும்.

vi. சான்றிதழ்களை தேர்வர்கள் / பெற்றோர்கள் சமூக இடைவெளியுடன் பெற்றுக் கொள்ள ஏதுவாக பள்ளித் தலைமை ஆசிரியர் இரண்டு வகுப்பறைகளை காத்திருப்பு அறைகளாக (Waiting rooms) அமைத்தல் வேண்டும். தேர்வர்கள் / பெற்றோர்கள் காத்திருக்கும் அறைக்கு வெளியே கூட்டம் கூடுவதற்கு அனுமதித்தல் கூடாது.

vii. பள்ளி வளாகத்தில் கை கழுவுவதற்கு சோப்பு மற்றும் தண்ணீர் வசதி ஏற்பாடு செய்தல் வேண்டும். அதற்கேற்ப பள்ளியின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் வழி ஆகியவற்றில் சோப்பு மற்றும் கை கழுவுவதற்கு தகுந்த ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**viii.** மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்கள் தேர்வர்களுக்கு வழங்கிடுவதற்கு முன்னரே **பள்ளிகளில் உள்ள** காத்திருப்பு அறைகள் (Waiting rooms) மற்றும் சான்றிதழ் விநியோகிக்கும் **அறைகளில் உள்ள மேசை, நாற்காலி, கதவு, ஜன்னல் ஆகியவற்றில் கிருமிநாசினி தெளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

ix. சான்றிதழ்கள் விநியோகப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், பணியாளர்கள், அனைவரையும் அவர்களது கைகளை சோப்பு / Hand Sanitizers கொண்டு சுத்தம் செய்த பின்னரே பள்ளி வளாகத்திற்குள் அனுமதிக்க வேண்டும்.

x. ஆசிரியர்கள் / பணியாளர்கள்/ மாணவர்கள் / தேர்வர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பதை பள்ளித் தலைமை ஆசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

xi. ஆசிரியர்கள் / பணியாளர்கள் / மாணவர்கள் அனைவரும் தேவையின்றி பள்ளி வளாகத்திற்குள் கூட்டம் கூடுதல் கூடாது என அறிவுறுத்துதல் வேண்டும்.

**xii.** **மேலும், அரசாணை (நிலை) எண்.379, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM.II) துறை, நாள்.22.07.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகள் அனைத்தும் பள்ளிவளாகத்தில் கண்டிப்பாக பின்பற்றப்படுதல் வேண்டும்.**

மேற்குறிப்பிட்ட அறிவுரைகளைப் பின்பற்றி மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்களை மாணவர்கள் / தேர்வர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்./–**
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்